**நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு**

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.



# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2024

## இடைநிலை கீழ்ப்பிரிவு (ஆண்டு 5 & 6)

## Intermediate Lower Level (Year 5 & 6)

வழங்கப்படும் நேரம் : 75 நிமிடங்கள்

Time Given : 75 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

Aug 2024

**1 முதல் 5 வரை கோடிடப்பட்ட இடைவெளிக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க**

**( மதிப்பெண்கள் 2 X 5 = 10 )**

1. வாணியும் கண்ணனும் வீடு வந்து ____________.

(அ) சேற்ந்தார்கள் (ஆ) சேர்ந்தார்கள்

(இ) செர்ந்தார்கள் (ஈ) செற்ந்தார்கள்

2. தமிழ் மொழி வாழ்த்தை எழுதியவர் ____________ .

(அ) மகாகவி பாரதியார் (ஆ) பாரதிதாசன்

(இ) கண்ணதாசன் (ஈ) கம்பன்

3 எனது தாத்தா மிகவும் ____________ நடந்தார்.

(அ) அழகாக (ஆ) செல்லமாக

(இ) இனிமையாக (ஈ) மெதுவாக

4. உலகப் பொது நூல் என்று போற்றப்படும் நூல் ____________ .

(அ) ராமாயணம் (ஆ) பைபிள்

(இ) திருக்குறள் (ஈ) மகாபாரதம்

5. மீன்கள் தண்ணீரில் ____________ .

(அ) மிதந்தன (ஆ) நீந்தின

(இ) சென்றன (ஈ) நடந்தன

**6 முதல் 10 வரை உள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவுத் செய்க**

**( மதிப்பெண்கள் 2 X 5 = 10 )**

6. நேற்று நடந்த பள்ளி ஆண்டு விழாவிற்கு ____________ வந்திருந்தீர்களா?

(அ) நீ (ஆ) நான்

(இ) நீங்கள் (ஈ) நாம்

7. நாம் எல்லோரும் பள்ளியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் ____________.

(அ) பங்குபற்றினோம் (ஆ) கலக்கவில்லை

(இ) சென்று (ஈ) வந்தோம்

8. புறாக்கள் மரத்தின் மீது ____________ .

(அ) அமர்ந்தான் (ஆ) பறந்தது

(இ) அமர்ந்து இருந்தன (ஈ) பறந்தேன்

9. சிற்பங்களை செதுக்குபவர் ____________ .

(அ) தச்சர் (ஆ) கொல்லன்

(இ) கள்ளன் (ஈ) சிற்பி

10. நாட்டை ஆளுபவன் ____________.

(அ) மந்திரி (ஆ) கொற்றவன்

(இ) அரசி (ஈ) படைத் தலைவன்

**கீழே தரப்பட்டுள்ள 11–15 வரையிலான வாக்கியங்களில் கோடிட்ட சொற்கள் எதைக் குறிக்கின்றன?**

**(மதிப்பெண்கள் 2 X 5 = 10)**

11. இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்தான்.

(அ) எதிர்காலம் (ஆ) நிகழ்காலம் (இ) இறந்தகாலம்

12. அடுத்த மாதம் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெறும் .

(அ) நிகழ்காலம் (ஆ) இறந்த காலம் (இ) எதிர்காலம்

13. அழகான தோகையை விரித்து மயில் நடனம் ஆடியது.

(அ) பயனிலை (ஆ) எழுவாய் (இ) செயப்படுபொருள்

14. பாடங்களை மாணவர்கள் படிக்கிறார்கள்.

(அ) எழுவாய் (ஆ) செயப்படுபொருள் (இ) பயனிலை

15. மந்தையில் மாடுகள் கூட்டமாக நின்று மேய்கின்றன.

(அ) ஒன்றன்பால் (ஆ) பலவின்பால் (இ) பலர்பால்

**16 முதல் 20 வரை உள்ள வினாக்களுக்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்துப் பொருத்தமான பதிலைத் தெரிவு செய்க.**

**(மதிப்பெண்கள் 2 X 5 = 10)**

நிரஞ்சனி ஐந்தாம் வகுப்பில் படிக்கும் மாணவி. அவளுக்கு ஆங்கிலம் பிடித்த அளவிற்குத் தமிழ் பிடிக்காது. தமிழில் பேசமாட்டாள். தமிழில் யார் கேள்வி கேட்டாலும் ஆங்கிலத்தில் மட்டுமே பதில் கூறுவாள். ஆங்கிலத்தில் பேசினால் மட்டுமே பிறர் தனக்கு மரியாதை கொடுப்பார்கள் என்று எண்ணிக்கொள்வாள்.

நாட்கள் செல்லச் செல்ல அவளுடைய தமிழ் மதிப்பெண்கள் குறையத் தொடங்கின. தமிழ் ஆசிரியர் அவளைத் தமிழில் பேசிப் பழகச் சொன்னார். ஆனால், அவளுக்குத் தமிழில் பேசத் தயக்கம ாக இருந்தது. தான் தவறாகப் பேசிவிடுவேனோ அல்லது தன்னை யாராவது கேலி செய்வார்களோ எனப் பயப்படத் துவங்கினாள். வாய்மொழித் தேர்வுகளும் நெருங்கத் தொடங்கின. இதைக் கவனித்த தோழி மலர்விழி, அவளுக்கு ஒரு சில அறிவுரைகளைக் கூறினாள். பள்ளி நண்பர்களுடன் தமிழில் பேசுமாறு ஊக்குவித்தாள். ஏதேனும் தவறுகள் இருந்தாலும் பரவாயில்லை. பேசப் பேசத்தான் தமிழ் மொழி மேம்படும் என்று நம்பிக்கை அளித்தாள். இதனையே 'செந்தமிழும் நாப் பழக்கம்' என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர் என்று சொல்லி ஊக்குவித்தாள். நிரஞ்சனியும் தயக்கத்தை விட்டுத் தமிழ் பேசத் துவங்கினாள், அவளிடம் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன. விடா முயற்சி வெற்றியின் இரகசியம் அல்லவா?

16. நிரஞ்சனி ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்தது ஏன்?

(அ) தமிழில் பேசப் பிடிக்கவில்லை.

(ஆ) தமிழில் பேசினால் மரியாதை கிடைக்காது என்பதால்.

(இ) ஆங்கில மொழி தெரிந்ததால்.

(ஈ) ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று கட்டாயப் படுத்தியதால்.

17. ஏன் நிரஞ்சனி பயப்பட்டாள்?

(அ) அவளுடைய தமிழ் மதிப்பெண்கள் குறைந்ததால்.

(ஆ) ஆங்கிலம் விருப்பமானதால்.

(இ) ஆசிரியரின் அறிவுரையினால்.

(ஈ) தவறாக தமிழ் பேசிவிடுவேன் என்று.

18. ‘செந்தமிழும் நாப் பழக்கம்’ என்ற தொடரின் பொருள் என்ன?

(அ) தொடர்ந்து தமிழ் பேசினால் மொழி வளம் மேம்படும்.

(ஆ) செந்தமிழில் மட்டுமே பேச வேண்டும்.

(இ) தமிழ் முன்னோர்களால் பேசப்பட்டது.

(ஈ) தொடர்ந்து பேசினால் நன்மை வரும்.

19. நிரஞ்சனியிடம் ஏற்பட்ட மாற்றங்களுக்கு முக்கிய காரணம் எது?

(அ) ஆங்கில மொழி.

(ஆ) நிரஞ்சனியின் தயக்கம்.

(இ) பலரின் முயற்சி.

(ஈ) தோழி மலர்விழியின் ஆதரவு.

20. வெற்றியின் இரகசியமாகக் குறிப்பிடப்படுவது எது?

(அ) நண்பர்கள்.

(ஆ) அறிவுரைகள்.

(இ) தொடர்ந்த முயற்சி.

(ஈ) தொடர்ந்து பேசுதல்.

**கீழே தரப்பட்டுள்ள 21–25 வரையிலான சொற்களுக்கு பொருத்தமான எதிர்ச் சொல்லை எழுதுக.**

**(மதிப்பெண்கள் 3 X 5 = 15)**

21. பரத் கால்ப்பந்து விளையாட்டில் வெற்றி பெற்றான்.
வெற்றி என்பதன் எதிர்ச்சொல் ____________.

22. நேர்மறை எண்ணங்கள் நம் வாழ்வை மேம்படுத்தும்.
நேர்மறை என்பதன் எதிர்ச்சொல் ____________ .

23. ஏழை மக்களுக்கு உதவுவது மனிதப்பிறப்பின் உயர்ந்த கடமையாகும்.
ஏழை என்பதன் எதிர்ச்சொல் ____________ .

24. அவன் என் சிறந்த நண்பன்.
நண்பன் என்பதன் எதிர்ச்சொல் ____________.

25. உண்மை எப்போதும் வெல்லும்.
உண்மை என்பதன் எதிர்ச்சொல் ____________ .

**கீழே தரப்பட்டுள்ள 26–30 வரையிலான கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த சொல்லை எழுதுக.**

**(மதிப்பெண்கள் 3 X 5 = 15)**

26. பள்ளி விடுமுறையில் மகிழ்ச்சியாக நண்பர்களுடன் விளையாடினேன்.

27. தாமரை மலர் குளத்தில் நிறைய இருந்தது.

28. ஞாயிற்றுக் கிழமை எங்கள் பாடசாலைக்கு விடுமுறை.

29. பௌர்ணமி அன்று நிலா பெரிதாக தெரிந்தது.

30. இன்று நமது அரசர் போருக்குப் போகிறார்.

**கீழே தரப்பட்டுள்ள 31–35 வரையிலான வினாக்களுக்கு கீழேயுள்ள கடிதத்தை வாசித்து விடை எழுதுக.**

**(மதிப்பெண்கள் 3 X 5 = 15)**

திரு. தென்னவன்
காந்தி பாடசாலை
12 கீழ்வீதி,
மதுரை.

மதிப்புக்குரிய ஆசிரியர் தென்னவன் அவர்களுக்கு,

ஐயா,
உங்கள் அன்பு மாணவன் தமிழ்ச்செல்வன் எழுதும் கடிதம். நான் ஏழாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை உங்களிடம் தஞ்சாவூர் தமிழ்ப் பள்ளியில் தமிழ் கற்றேன். இப்போது அவுஸ்திரலியாவில் பணிபுரிகிறேன். வரும் சித்திரை மாதம் 6 ஆம் தேதி மதுரைக்கு சித்திரைத் திருவிழாவுக்கு வருகிறேன். அப்போது தங்களை நேரில் பார்க்க ஆவலாக இருக்கிறேன். உங்கள் பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு,
தங்கள் பணிவுள்ள
தமிழ்ச்செல்வன்

31. இக்கடிதம் யாரால் எழுதப்பட்டது?

32. தமிழ்ச்செல்வன் எந்த ஊரில் எந்த ஆசிரியரிடம் படித்தான்?

33. ஆசிரியர் தமிழ்ச்செல்வனுக்கு என்ன கற்றுக் கொடுத்தார்?

34. தமிழ்ச்செல்வன் எதற்கு மதுரை வருகிறான்?

35. ஆசிரியர் தென்னவன் எந்தப் பள்ளியில் பணி புரிகிறார்?

**கீழே தரப்பட்ட 36–40 வரையிலான சொற்களைப் பிரித்து எழுதுக.**

**(மதிப்பெண்கள் 3 X 5 = 15)**

36. கற்பாறை

37. மானமுண்டு

38. கவிச்சக்கரவர்த்தி

39. மக்கள்கூட்டம்

40. கங்கைக்கரை

நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2024

## இடைநிலை கீழ்ப்பிரிவு (ஆண்டு 5 & 6)

## Intermediate Lower Level (Year 5 & 6)

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.
Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்
ANSWER SHEET
2024

இடைநிலை கீழ்ப்பிரிவு
Intermediate Lower Level

சுட்டிலக்கம் :
Index Number :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அ | ஆ | இ | ஈ | 16. | அ | ஆ | இ | ஈ |
| 2. | அ | ஆ | இ | ஈ | 17. | அ | ஆ | இ | ஈ |
| 3. | அ | ஆ | இ | ஈ | 18. | அ | ஆ | இ | ஈ |
| 4. | அ | ஆ | இ | ஈ | 19. | அ | ஆ | இ | ஈ |
| 5. | அ | ஆ | இ | ஈ | 20. | அ | ஆ | இ | ஈ |
| 6. | அ | ஆ | இ | ஈ | 21. | | | | |
| 7. | அ | ஆ | இ | ஈ | 22. | | | | |
| 8. | அ | ஆ | இ | ஈ | 23. | | | | |
| 9. | அ | ஆ | இ | ஈ | 24. | | | | |
| 10. | அ | ஆ | இ | ஈ | 25. | | | | |
| 11. | அ | ஆ | இ | ஈ | 26. | | | | |
| 12. | அ | ஆ | இ | ஈ | 27. | | | | |
| 13. | அ | ஆ | இ | ஈ | 28. | | | | |
| 14. | அ | ஆ | இ | ஈ | 29. | | | | |
| 15. | அ | ஆ | இ | ஈ | 30. | | | | |

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்
ANSWER SHEET
2024

இடைநிலை கீழ்ப்பிரிவு
Intermediate Lower Level

சுட்டிலக்கம் :
Index Number :

| | |
|---|---|
| 31. | |
| 32. | |
| 33. | |
| 34. | |
| 35. | |
| 36. | |
| 37. | |
| 38. | |
| 39. | |
| 40. | |